

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – III

பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

347. **முனைவர் மா. முத்துவிஜயலட்சுமி** 1675
அகநானூற்றுப் பாடல்கள் வெளிப்படுத்தும்
வாழ்வியல் நிலைகள்

348. **முனைவர் கா. சிவகாமி** 1680
சங்ககால மக்களின் வாழ்க்கை முறை - பாடுபொருள்

349. **முனைவர் சு. நாகரத்தினம்** 1686
பாரதியின் கண்ணன்

350. **முனைவர் ம. ஷீலா ஸ்ரீநிவாசன்** 1689
நம்மாழ்வாரின் திருவாசிரியம்

351. **பொன். கதிரேசன்** 1694
சிற்பியின் கவிதைகளில் பாடுபொருள் மாற்றங்கள்

352. **முனைவர் யாழ். சு. சந்திரா** 1699
தூது இலக்கியங்களில் காலந்தோறும்
பாடுபொருள் மாற்றம்

353. **முனைவர் க. பழனிவேல்** 1705
சங்க காலத்திற்குப் பின் பாடுபொருள் மாற்றங்களும்
விளைவுகளும்

354. **முனைவர் இரா. மணிமேகலை** 1710
வேறின்மை

355. **Dr. T. Muraleeswari** 1714
Anita Desai's *Clear Light of Day* explores the imagery
of Modern Women

356. **த. பிரியா** 1719
பனிபெய்யும் இரவுகள் புதினத்தில் மலையகத்
தோட்டத் தொழிலாளர்களின் நிலை

357. **முனைவர் ந. சண்முகவடிவு** 1723
இலக்கியங்களில் உயிர்

358. **முனைவர் சொ. சுரேஷ்** 1729
சங்க காலம் பொற்காலமா?

359. **எம். திருக்குமரன்** 1735
கருவாச்சி காவியத்தில் கிராமியப் பின்புலம்

360. **முனைவர் த. அஜி** 1741
பிரயோக விவேகத்தில் பாடுபொருள் தன்மைகள்

361. **முனைவர் ப. பத்மாவதி** 1747
காலந்தோறும் பெண்களின் நிலை

# 353. சங்க காலத்திற்குப் பின் பாடுபொருள் மாற்றங்களும் விளைவுகளும்

முனைவர் க. பழனிவேல்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

**"காதலும் போரும் பழைய இலக்கியங்களின் கருத்தாகவும், சமயமும் தத்துவமும் இடைக்கால இலக்கியங்களின் சாரமாகவும், விஞ்ஞானமும் மனிதவியலும் இக்கால இலக்கியங்களின் பிரிவாகவும் அமைந்துள்ளன"** என்ற பூரணலிங்கம் பிள்ளை அவர்களின் கூற்றின்வழி, தமிழ் இலக்கிய வரலாற்றை எடுத்து பார்த்தோமேயானால், பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் பல பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழிலக்கியங்கள் தோன்றியுள்ளதை அறியமுடிகிறது. ஆனால் தமிழில் தோன்றிய அத்தனை இலக்கியங்களும் சிறப்பானவையென்றோ போற்றுதற்குரியவையென்றோ அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. காரணம் அவ்வியலக்கியங்களின் பாடுபொருள், தனித்தன்மைகள் மற்றும் சமூகத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டே அவற்றின் சிறப்பும் புகழும் நிலைநிறுத்தப் பெறுகின்றது. அவ்வகையில் சங்க இலக்கியங்கள் இன்றுவரை போற்றத்தக்க இலக்கியங்களாகவும், செவ்வியல் தன்மை கொண்டதாகவும் விளங்குகிறது. சங்கம் மருவிய கால இலக்கியங்களில் சில குறிப்பிடத்தக்க இலக்கியங்களில் இத்தகைய தன்மைகளைக் காண முடிகிறது. பின்னர் தோன்றிய பெரும்பான்மையான இலக்கியங்கள் அத்தகு புகழினையோ, செவ்வியல் தன்மையையோ பெறவில்லை. இதற்கு சில அடிப்படையான காரணங்கள் உண்டு. அவற்றில் முதன்மையானதாகக் கொள்ளப்பட வேண்டியது பாடுபொருள் மாற்றமாகும். சங்க காலத்திற்குப் பின் தோன்றிய இலக்கியங்களின் பாடுபொருள் மாற்றங்களே இக்கட்டுரையின் ஆய்வுப் பொருண்மையாக அமைகிறது.

## சங்க இலக்கியங்களில் பாடுபொருள்களும் சிறப்பும்

காதலும் வீரமும் சங்கப் பாடல்களின் முதன்மைப் பாடுபொருள்களாக விளங்குகின்றன என்பதைப் பூரணலிங்கம் பிள்ளையின் கருத்துவழி முன்னர் அறிந்தோம். என்றாலும் ஏனைய நிகழ்வுகளையும், பொருண்மைகளையும் சங்க இலக்கியப் பாடல்கள் பாடுபொருள்களாகக் கொள்ள தவறவில்லை. முதலில் அகப்